| | |
|---|---|
| TNVR13000599<br>2020 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை–திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ.,எல்எல்.எம்.,<br>சார்பு நீதிபதி<br>2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ம் நாள் சனிக்கிழமை<br>I.A.No.1/2024 in O.S.No.154/2020 |

எரக்காள் ... மனுதாரர் / சேர்க்கப்பட வேண்டிய 5ம் பிரதிவாதி

/எதிர்/

1. திருமுருகன் ... 1ம் எதிர்மனுதாரர் / வாதி
2. ஆண்டிச்சாமி (எ) பூமி
3. ரவி
4. மாரிச்சாமி
5. சார்பதிவாளர், காரியாபட்டி ... 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு 13.11.2024 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் /சேர்க்கப்பட வேண்டிய 5ம் பிரதிவாதிதரப்பில் வழக்கறிஞர் திரு.சி.மாஸ்டர் ரவிக்கண்ணன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.மோகன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பார்த்தசாரதி அவர்கள் ஆஜராகியிருந்தபோதிலும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுப்புரை ஏதும் இல்லை என மனுவில் மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும்,, 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகியிருந்தபோதிலும், இம்மனுவில் மறுப்புரை ஏதும் தாக்கல் செய்யாத நிலையிலும்,, இரு தரப்பு வாதம் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரரை அசல் வழக்கு எண்.154/2020ல் 5ம் பிரதிவாதியாக சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்த ஏதுவாக தகுந்த உத்தரவிடக்கோரி சிபிசி ஆர்டர் 1 ரூல் 10(2) மற்றும் பிரிவு 151ன் படி மனுதாரர் / சேர்க்கப்பட வேண்டிய 5ம் பிரதிவாதி தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்:–</u>

அசல் வழக்கு தாவாச் சொத்தான 2 ஏக்கர் 62 செண்டு புஞ்சை நிலத்தில் மனுதாரரின் தகப்பனார் எரப்ப மூப்பருக்கு 1 ஏக்கர் 31 செண்டு கிரையமாகவும், மீதமுள்ள 1 ஏக்கர் 31 செண்டு பூர்வீகமாகவும் பாத்தியம். மனுதாரரின் தகப்பனார் இறப்பிற்கு பின்பு மனுதாரரும், அவரது சகோதரருமான போஸ் என்பவரும் ஷை சொத்தினை கூட்டாக அனுபவம் செய்து வந்தனர். மனுதாரருக்கு தாவாச் சொத்தில் 1/2 பாகம் உள்ளது. மனுதாரரின் தகப்பனார் பெயரிலேயே வருவாய்த்துறை பட்டாவும் தாக்கலாகியுள்ளது. மனுதாரரின் சகோதரர் போஸ் கடந்த 03.05.2019 ல் இறந்துவிட்டார். இந்நிலையில் மனுதாரரின் சகோதரரின் மகனான 1ம் எதிர்மனுதாரர் / வாதி தாவாச் சொத்து முழுவதும் தனக்கு மட்டும் பாத்தியம் என்றும், தாவாச் சொத்தில் எவ்வித பங்கும் இல்லை என்றும், திருமண காலத்திலேயே மனுதாரர் அவரது பங்கினை அவரது சகோதரர் போஸ்–க்கு விட்டுக் கொடுத்து விட்டதாகவும், அதற்கு ஈடாக மனுதாரருக்கு சீர்வரிசைகள் செய்ததாகவும், பொய்யான சங்கதிகளை அசல் வழக்கில் கூறி மனுதாரருக்கு தாவாச் சொத்தில் உள்ள சட்டப்படியான உரிமையை மறுத்து செயல்பட்டு வருகிறார். ஷை வழக்கு விபரம் மனுதாரருக்கு தற்போதுதான் தெரிய வந்தது. அதனால் இவ்வழக்கில் மனுதாரரை தரப்பினராக சேர்த்து தாவாச் சொத்தில் உள்ள உரிமையை நிலைநாட்ட வேண்டியது சட்டப்படி அவசியமானது என மனுதாரருக்கு சட்ட ஆலோசனை கிடைத்துள்ளது. எனவே, அ.வ.எண்.154/2020 வழக்கில் மனுதாரரை 5ம் பிரதிவாதியாக சேர்த்துக் கொண்டு வழக்கினை மேல்நடத்த தகுந்த உத்தரவிடக் கோரி மனுதாரர் / சேர்க்கப்படவேண்டிய 5ம் பிரதிவாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. 1<u>ம் எதிர்மனுதாரர்/ வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மறுப்புரையின் சுருக்கம்:</u>–

மனுவில் கண்டுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் 1989ம் ஆண்டுக்கு முன்பே திருமணமாகி சென்றுவிட்ட நிலையில், தகப்பனார் வழி பூர்வீக சொத்துக்களில் உரிமை கோர சட்டத்தில் வழிகள் இல்லை. மேலும் மனுதாரருக்குத் தெரிந்தே மனுதாரரின் சகோதரர் போஸ் தபசு சொத்துக்கள் முழுவதையும் தனது தனித்த அனுபவத்தில் வைத்து மனுதாரரின் ஆட்சேபணை

இன்றி அனுபவம் செய்து வந்து கடந்த 14.09.2014ல் இவ்வழக்கு வாதிக்கு தபசு சொத்து குறித்து ஒரு தானப்பத்திரமும் எழுதிக் கொடுத்தும் உள்ளார். மேற்படி விபரங்கள் அனைத்தும் மனுதாரருக்கு நன்கு தெரியும். இருந்தும் உரிய காலத்தில் வாதியின் உரிமைகளை ஆட்சேபிக்காமல் இருந்து விட்டு தற்போது தபசு சொத்துக்களில் உரிமை இருப்பதாகக் கூறுவது சட்டப்படி ஏற்புடையதல்ல. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே இம்மனுவில் தீர்வுக்குரிய சங்கதி ஆகும்.

**5.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது, 1ம் எதிர்மனுதாரர் / வாதியால், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி நீதிமன்றத்தில் எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவின்பேரில் இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்நீதிமன்ற அ.வ.எண்.127/2018 வழக்குடன் இணைந்து நடத்தப்பட்டு வருவதாக தெரிய வருகிறது. இந்நிலையில், தாவாச் சொத்துக்கள் மனுதாரர் மற்றும் அவரது சகோதரர் போஸ் என்பவருக்கு கூட்டாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் எனவும், தனது சகோதரர் போஸ் என்பவர் இறந்துவிட்டநிலையில், அவரது மகனான 1ம் எதிர்மனுதாரர் / வாதி தாவாச் சொத்து முழுவதும் தனக்கு மட்டும் பாத்தியம் என்றும், தாவாச் சொத்தில் மனுதாரருக்கு எவ்வித பங்கும் இல்லை என்றும், திருமண காலத்திலேயே மனுதாரர் அவரது பங்கினை அவரது சகோதரர் போஸ்-க்கு விட்டுக் கொடுத்து விட்டதாகவும், அதற்கு ஈடாக மனுதாரருக்கு சீர்வரிசைகள் செய்ததாகவும், பொய்யான சங்கதிகளை அசல் வழக்கில் கூறி மனுதாரருக்கு தாவாச் சொத்தில் உள்ள சட்டப்படியான உரிமையை மறுத்து செயல்பட்டு வருவதாகவும், ஷை வழக்கு விபரம் மனுதாரருக்கு தற்போதுதான் தெரிய வந்தது எனவும், அதனால் இவ்வழக்கில் மனுதாரரை தரப்பினராக சேர்த்து தாவாச் சொத்தில் உள்ள உரிமையை

நிலைநாட்ட வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

**6.** ஆனால், மனுதாரர் 1989ம் ஆண்டுக்கு முன்பே திருமணமாகி சென்றுவிட்ட நிலையில், தகப்பனார் வழி பூர்வீக சொத்துக்களில் உரிமை கோர சட்டத்தில் வழிகள் இல்லை எனவும், மேலும் மனுதாரருக்குத் தெரிந்தே மனுதாரரின் சகோதரர் போஸ் தபசு சொத்துக்கள் முழுவதையும் தனது தனித்த அனுபவத்தில் வைத்து மனுதாரரின் ஆட்சேபணை இன்றி அனுபவம் செய்து வந்து கடந்த 14.09.2014ல் இவ்வழக்கு வாதிக்கு தபசு சொத்து குறித்து ஒரு தானப்பத்திரமும் எழுதிக் கொடுத்தும் உள்ளார் எனவும், மேற்படி விபரங்கள் அனைத்தும் மனுதாரருக்கு நன்கு தெரிந்திருந்தும் உரிய காலத்தில் வாதியின் உரிமைகளை ஆட்சேபிக்காமல் இருந்து விட்டு தற்போது தபசு சொத்துக்களில் உரிமை இருப்பதாகக் கூறுவது சட்டப்படி ஏற்புடையதல்ல எனவும் 1ம் எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

**7**. மனுதாரர் / உத்தேச தரப்பினர் தரப்பில், தாவாச் சொத்தில் தான் கூட்டு அனுபவம் மற்றும் உரிமையில் இருந்து வருவதாகவும், ஆனால் 1ம் எதிர்மனுதாரர் / வாதி தாவாச் சொத்து முழுவதும் தனக்கு மட்டுமே பாத்தியம் என்றும், மனுதாரருக்கு தாவாச் சொத்தில் உரிமை இல்லை என்பது போல் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதன் அடிப்படையில், தாவாச் சொத்தில் தனது உரிமையை நிலை நாட்டும் பொருட்டு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக தெரிய வருகிறது. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1989ம் ஆண்டுக்கு முன்பே மனுதாரர் திருமணமாகி சென்றுவிட்ட நிலையில் தகப்பனார் வழி பூர்வீக சொத்துக்களில் உரிமை கோர இயலாது என்று ஆட்சேபணை செய்யப்பட்டுள்ள போதிலும், மனுதாரர் தாவாச் சொத்தில் தான் கூட்டு அனுபவத்தில் இருந்து வருவதாகக் கூறியுள்ள நிலையில், மனுதாரருக்கு தாவாச் சொத்தில் உரிமை உள்ளதா? இல்லையா? என்பது குறித்து அசல் வழக்கின் விசாரணையின்போதுதான் தீர்மானிக்க இயலுமே தவிர இம்மனுவில் தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**8.** தாவாச் சொத்துக்களைப் பொறுத்து உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையிலும், தாவாச்

சொத்துக்களில் தனக்கு உரிமை உள்ளது எனக் கோரி தன்னை தரப்பினராக சேர்க்கக் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ள நிலையிலும், மனுதாரரை கட்சி சேர்த்து அவரையும் உள்ளடக்கி அசல் வழக்கில் தீர்வு காண்பதுதான் முறையானது என்றும் இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. மேற்படி மனுதாரர் அவருக்குள்ள சொத்துரிமையை வேண்டாம் என்று விட்டுக் கொடுத்து விட்டாரா? என்பது பற்றியோ அவருக்கு 1989ம் ஆண்டுக்கு முன்பு திருமணம் நடந்ததா? என்பது பற்றியோ இந்த மனுவில் முடிவெடுக்க இயலாது எனவும், அதுசம்பந்தமாக அசல் வழக்கில்தான் சாட்சியங்களுக்குப்பிறகு தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் தெளிவுபடுத்து–கிறது. மேலும் இந்த வழக்கோடு இணைத்து நடத்தப்படுகின்ற அ.வ.எண்.127/2018ல் இந்த மனுதாரர் 1ம் பிரதிவாதியாகவும், இந்த 1ம் எதிர்மனுதார் 3ம் பிரதிவாதியாகவும் அவரது தகப்பனார் போஸ் 2ம் பிரதிவாதியாகவும் காட்டப்பட்டு, அந்த வழக்கின் வாதிகளால் சொத்துரிமை விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக வழக்கு நடத்தப்பட்டு வருவதாக தெரிய வருகிறது. மேற்படி அ.வ.எண்.127/2018லும் இந்த மனுதாரர் மற்ற பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை ஆட்சேபணை செய்து தனித்து வழக்கு நடத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிய வருகிறது. இந்த சூழ்நிலையில், 1ம் எதிர்மனுதாரர் / வாதிக்கும், இந்த மனுதாருக்கும் முரண்பட்ட கருத்துகள் இருப்பதாக தெரிய வருவதால், இந்த வழக்கிலும் இந்த மனுதாரரை ஒரு தரப்பினராக சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்துவதுதான் முறையானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. அசல் வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் உள்ள சூழ்நிலையிலும், அசல் வழக்கு உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாலும், உடன் இணைந்த வழக்கில் இந்த மனுதாரர் ஒரு தரப்பினர் என்பதாலும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்படும் ஆட்சேபணை அவசியமற்றது என இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. எனவே மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும் மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டும், மனுதாரரை அசல் வழக்கில் 5ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்த பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

J SELVAN JESU RAJA

Digitally signed by J SELVAN JESU RAJA

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>: இல்லை

J SELVAN JESU RAJA

Digitally signed by J SELVAN JESU RAJA

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
I.A.No.1/2024 in OS.No.154/2020
உத்தரவு நாள் – 16.11.2024